1969, சனவரி 29]

திரு. சு. துரைசாமி : ஐயா, கோவையில் இருக்கும் தொழிற் பேட்டையில் நூறு தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்படுவதாகத் திட்டமிடப்பட்டு அது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் ஏறத்தாழ ஐம்பதுக்கும் குறைவான தொழிற்கூடங்கள்தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஐம்பது ஆரம்பிக்கப் படவில்லை. அதுபோல், பொள்ளாச்சியில் கட்டப்பட்ட தொழிற் பேட்டையிலும், இன்னும் பல தொழில் யூனிட்கள் துவங்கப்பட வில்லை. அவையெல்லாம் எப்பொழுது துவங்கப்படும்? அதற்கு அரசாங்கம் ஏதாவது தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மதுராந்தகத்தையொட்டியிருக்கும் காரணத்தால், மற்றைய தொழிற்பேட்டைகள் பற்றிய விவரங்கள் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வினுயகம்.

திரு. கே. வினுயகம் : நீங்கள் தயவுசெய்து கேள்வி போடும்படி யாக அனுமதித்தும், நான் இப்பொழுது தயாராக இல்லை. காரணம் வேறு.

அரசினர் தொழிற்கூடம், மேட்டூர்.

* 22 வினு—**திரு. கே. ஆர். கோவிந்தன்** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் இயங்கிவரும் அரசினர் ஓர்க்ஷாப்பில் வேலை குறைப்பு செய்யும் செயற்குறிப்பு ஏதும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினு எழாது.

Rebate on purchase of high speed diesel oil.

* 23 Q.—**Thiru N. KASIRAMAN** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the rebate offered by the Indian Oil Corporation Ltd., towards the purchase of high speed diesel oil was availed of between April 1963 and August 1964 and April 1965 and March 1966 in respect of buses and other vehicles operated by the State Transport Department; and

(b) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்த வினு எழவில்லை.